முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

வாதிகள் தரப்பு 3 வது சாட்சி (வா.சா.3)

அ.வ.எண். 105/2021

| | | |
|---|---|---|
| பெயர் | - | ராஜேஷ் |
| த/பெ | - | தங்கபெருமாள் |
| கிராமம் | - | முத்தலக்குறிச்சி |
| தாலுகா | - | கள்குளம் |
| தொழில் | - | தனிவட்டாட்சியர்,<br>தேசிய நெடுஞ்சாலை நிலம் எடுப்பு பிரிவு,<br>நாகர்கோவில் |
| வயது | - | 47 |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9 நாள் திங்கட்கிழமை மேற்படியாரிடமிருந்து சத்திய பிரமாணத்தின் பெயரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

முதல் விசாரணை

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்கவேண்டியும், ஆவணம் சமர்பிக்க வேண்டியும் தனிவட்டாட்சியர் தேசிய நெடுஞ்சாலை நிலம் எடுப்பு பிரிவு, நாகர்கோவில் ஆகிய எனக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது. அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்கிறேன். இதற்கு முன்பு வள்ளியூர், நிலம் எடுப்பு தனிவட்டாட்சியர் அலுவலகத்தில், இராதாபுரம் வட்டம், பழவூர் கிராமம் பகுதி I, சர்வே எண்.1287/4B, சர்வே எண்.1287/4C ஆகிய நிலங்களில் 1300 சதுர மீட்டர் இடம் தேசிய நெடுஞ்சாலை அமைக்க கையகம் செய்யப்பட்டது. **மேற்படி நிலம் கையகம் செய்யப்பட்டதற்கான ஆணை மற்றும் செயல்முறை நடவடிக்கை ஆவண எண்.**Roc.J4/13948/2006, award No.32/2007-2 **மற்றும் இணைப்பு-1 என்ற ஆவணம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி நிலம் சர்வே எண்.1287/4B, 4C கையகம் செய்யப்பட்டதற்கான இழப்பீடு தொகை முத்துகிருஷ்ணன் என்பவர் மனு அளித்ததின் பேரில் விசாரணை செய்யப்பட்டு இழப்பீடு தொகை 1300 சதுர மீட்டர் நிலத்திற்கு ரூ.13,274/- முத்துகிருஷ்ணன் என்பவருக்கு வழங்கப்பட்டது. **மேற்படி முத்துகிருஷ்ணன் என்பவர் அளித்த மனு மற்றும் இணைப்புகள் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.09 17:23:31 +0530

முத்துகிருஷ்ணன் என்பவருக்கு இழப்பீடு தொகை வழங்குவதற்காக அளிக்கப்பட்ட Proforma Report **நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இழப்பீடு தொகை வழங்கப்பட்டதற்கான ஒப்புதல் சீட்டு நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இழப்பீடு தொகை வழங்கவேண்டி வேறுயாரும் விசாரிக்கப்பட்டனரா என்றால் தங்கராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்படி தங்கராஜ் என்பவரின் வாக்குமூலம் நீதிமன்றத்தில் முன்னரே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. **மேற்படி தங்கராஜ் என்பவரின் வாக்குமூலம் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி தங்கராஜ் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தின் சரத்து என்னவென்றால் கையகம் செய்யப்பட்ட நிலம் தன்னுடைய நிலம் இல்லை என்று வாக்குமூலம் கொடுத்தார். சர்வே எண்.1287/4B2 ல் 1000 சதுர மீட்டரும், சர்வே எண்.1287/4C2 ல் 300 சதுர மீட்டரும் நிலமும் கையகம் செய்யப்பட்டது. சர்வே எண்.1287/4B2 ல் கையகப்படுத்தப்பட்டதற்கு எவ்வளவு இழப்பீடு தொகை ஒதுக்கப்பட்டது என்றால் 2 சர்வே எண்கள் 1287/4B2 மற்றும் 4C2 இணைத்து இழப்பீடு தொகை ஒதுக்கப்பட்டது. சர்வே எண். 1287/4B2 ஆவணங்களின் அடிப்படையில் தான் இழப்பீடு தொகை உரிய நபருக்கு வழங்கப்பட்டது. சர்வே எண். 1287/4B2 கையகப்படுத்தப்பட்டு இழப்பீடு தொகை வழங்கப்பட்டதற்கு தற்போது வரை எவ்வித மேல்முறையீடோ, எவ்வித ஆட்சேபனையோ தெரிவிக்கப்படவில்லை.

(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.09 17:23:35 +0530